DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT COURT, ERODE.
O.S.No.48/2018

Deposition of Witness : PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியம் | த/பெ. | : | பழனிச்சாமி |
| கிராமம் | : | ஈரோடு டவுண் | தாலுகா | : | ஈரோடு |
| தொழில் | : | ஜவுளி வியாபாரம் | வயது | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 14-07-2025.

குறுக்கு விசாரணை ( சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)

நான் 7 முதல் 11 பிரதிவாதிகளிடம் தாவாச்சொத்தை கிரையம் வாங்கினேன். எனது கிரைய ஆவணத்தில் கிரையம் கொடுத்தவர்களுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் எனக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று எனது கிரைய ஆவணத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் தவறு. 7 முதல் 11 பிரதிவாதிகளின் பெயரிலுள்ள கிரையப் பத்திரத்தின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தவறு. இராமகிருஷ்ணனின் பவருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் தாவாச்சொத்துக்களை குறிப்பிடவில்லை என்றால் தவறு. அஜீமாபீவியின் மகன்கள் எழுதிக்கொடுத்த விடுதலைப் பத்திரத்தின் முகமது ஜாபரிக்கு பாத்தியப்பட்ட தாவாச்சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து குறிப்பிடபடவில்லை என்றால் பொதுப்படையாக அனைத்துச்சொத்துக்களையும் உள்ளடக்கி குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் சொத்து விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பாக சொத்து விவரங்கள் குறிப்பிடவில்லை. தாவாச்சொத்துக்களின் சொத்து விவரத்தை குறிப்பாக வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடாததால் நான் தாவாச்சொத்தை கிரையம் வாங்கியது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் தவறு. அசையா சொத்துக்களை பொறுத்து கிரையமோ, பாகவிடுதலையோ, உயிலோ இதர ஆவணங்களோ எழுத வேண்டுமென்றால் அசையா சொத்துக்களின் சொத்து விவரம் குறிப்பிடபடவேண்டுமென்றால் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மொத்த சொத்தையும் உள்ளடக்கி வாசகங்கள் உள்ளது. நான்

தாவாச்சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வில்லங்க சான்றிதழ் பெற்று அதனை பார்த்து அதன் பின்புதான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் பெற்ற வில்லங்க சான்றிதழில் ராமசிருஷ்ணன் பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்த பொது அதிகார ஆவணம் குறிப்பிடப்பட்டுருந்ததா என்றால் இல்லை, ராமகிருஷ்ணன் பொது அதிகார முகவர் என்ற நிலையில் 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சொத்து வாங்க வேண்டுமென்றால் 18 வருடங்களுக்கு வில்லங்கம் போட்டுப்பார்த்து அதன் பிறகு தான் வாங்கப்படும் என்றால் சரிதான். நான் எடுத்து பார்த்த வில்லங்க சான்றிதழின் 7 முதல் 11 பிரதிவாதிகளின் கிரைய ஆவணத்தை தவிர இதர வில்லங்கங்கள் ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க அடுத்த வாய்தாவில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. District Judge, Erode.